# பதிப்புரை

அறிவழகுப் பதிப்பகத்தின் இரண்டாவது வெளியீடாக, கல்வயற் கவிஞர் வே. குமாரசாமியின் 'சிரமம் குறைகிறது' என்னும் இக்கவிதைத் தொகுப்பினை மக்கள் முன் படைப்ப தில் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறோம். குமாரசாமியவர்களின் கவிதையிலே, மொழியாற்றற் செம்மை யும், ஓசையுணர்வுப் பெருமிதமும், தெளிவும் திட்பமும் திறம் பட அமைந்து மிளிர்கின்றன.

இன்று, கவிஞர்களிற் பலரும் ஏனைய எழுத்தாளரும் மொழி எளிமையைச் சாட்டாகக் காட்டி, அந்தத் திரையி னுலே தம்து மொழி வறுமையை மறைக்க முயல்கின்றனர்: ஒவ்வொரு காலத்திலும் வாழும் உயர்ந்த இலக்கியப் படைப் பாளிகளெல்லாம் தத்தம் காலத்து மொழி என்னும் மூல வளத்திலிருந்து தத்தம் தேவைகளைப் பூர்த்தி செய்ய வல்ல உயர்ந்தபட்ச ஆற்றல் முழுவதையும் கறந்தெடுத்தே தம் சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர். கம்பனும் காளிதாசனும் மட்டுமன்றி, ஷெல்லியும் ஷேக்ஸ்பியருங்கூடத்தான் இவ் வுண்மைக்கு உதாரணமாய் விளங்குகின்றனர். இலக்கிய மென்பது மொழிப்பிரயோகத்தின் உச்சமான—உன்னதமான நிலைதான். இந்த வகையிலே மொழி வளத்தை முழுமையா கக் கையாள வேண்டிய கடப்பாடும் உரிமையும் பூண்ட வனன்றோ, கவிஞன்! கவிஞனுக்குள்ள இவ்வுரிமையைத் தாராளமாக — எவ்வித தயக்கமுமில்லாமற் பயன்படுத்தும் பண்பினைக் கவிஞர் குமாரசாமியிடம் நாம் காண்கிறோம்.

நம் கவிஞரிடம் காணத்தக்கதாயுள்ள மற்றுமொரு பண்பு ஓசையுணர்வுப் பெருமிதம். யாப்பில்லாப் புனைவு

களே இக்காலத்திற் 'புதுக் கவிதை' என்று சொல்லப்பட்டு பத்திரிகைகளாலுஞ் சஞ்சிகைகளாலும் வரவேற்றுப் பரப்பப் பட்டு வருகின்றன. 'முட்டாள்களின் கண்களுக்குப் புலப் படாத உயரிய ஆடைகளை அணிந்திருக்கிறேன்' என்று நம்பிக்கொண்டு, நிருவாணமாகப் பவனி வந்தாராம் ஒரு மன்னர்பிரான். அப்படியான பவனி தான், புதுக்கவிஞர் பலரின் இன்றைய பவனியும். யாப்பின்மையை, கவிதைக் கலையின் இன்றியமையாத இலக்கணமென நாட்ட முயலும் புதுக்கவிதையாளருட் பலர், வரலாற்றின் தொடர்ச்சியை மறுப்பது ஒருபுறமிருக்க, தம் மொழிவறுமை காரணமாகவே இவ்வாறான வறிய, வரட்சி மிக்க கோட்பாடுகளைத் தஞ்சம் அடைகின்றனர் என்று கூறுதல் தகும். ஏனென்றால், மொழியாற்றல் மிகுந்த கவிஞனுக்கு யாப்பு ஒருபோதுமே ஒரு தடையாகவோ தளையாகவோ இருந்ததில்லை; இருக்கவும் மாட்டாது. இலக்கியத்தின் உயிர்நிலைப் பண்புகளை உணர்ந்து கொள்ளாத புலவர் சிலர், யாப்பின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, வழக்கொழிந்த பழஞ் சொற்களைப் போட்டு நிரப்பிவிடுவர். இன்னுஞ் சிலர் வெற்றுச் சொற் களையும், சாரியைகளையும் ஓசைச் சக்கைகளையும், அசைநிலை களை இசைநிறைகளையும் இட்டு நிரப்பிச் சமாளிப்பதுண்டு. இந்த ஓசை நிரப்பிகள் கவிதைக்கு இன்றியமையாப் பண் பாயுள்ள செறிவுக்கு ஊறு செய்வதுடன், யாப்புக் கவிதை யின் மதிப்பையும் குறைத்து விடுகின்றன. யாப்பை முறை யாகக் கையாளும் வல்லமை அற்றவர்கள், கவிதை இயற் றும் ஆசையினால் உந்தப்பட்டு, ஆடத்தெரியாத தேவடியாள் அரங்கம் கோணல் என்று சொன்னதுபோல யாப்பின் பயன் பாட்டை நிராகரிக்க எண்ணுகின்றனர். ஆற்றல் மிகுந்த கவிஞன், மொழிப் பிரயோகங்களின் நெளிவு சுளிவுகளை உணர்ந்த ஒருவன், எத்தனை இலாகவமாகவும் இயல்பாகவும் செய்யுளிலக்கியம் படைத்தல் இயலும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் கவிஞர் குமாரசாமியின் படைப்புகள் உள்ளன. மக்களிடை வழங்கும் பேச்சு வழக்குப் பிரயோகங் களைக்கூட, யாப்பின் வரம்புகளுக்கு உட்படக் கோவை

செய்து எடுப்பாகவும்,எழிலாகவும் பொருட்பலிப்புப் பொருந்தும் வண்ணமும் கவிஞர் ஆண்டுள்ள திறம் பாராட்டி வியக்கத்தக்கது. இதனை ஓசையுணர்வுப் பெருமிதம் எனப் போற்றி நயத்தல் பொருந்தும்.

ஓசையுணர்வுப் பெருமிதத்துடன் தெளிவும் அமைந்து கிடத்தல், நம் கவிஞரின் ஆக்கங்களின் மாற்றுயர்ந்த மாண்புக்கு மற்றுமொரு சான்றாகும். 'சவியுறத் தெளிந்து, தண்ணென்று, ஒழுக்கமும் தழுவி' என்று, கவிதைகளின் பண்பு நலனைக் கம்பன் வரைவு செய்து காட்டுவது இவ்விடத்தில் நினைவுகூரத் தக்கது. தெளிவின்மையே நவீனத்துவம் என மயங்குவோரின் புலம்பல்களுக்கும் நம் கவிஞரின் படைப்புகளுக்கும் வெகுதூரம்.

இவை யாவற்றையும்விட, இத்தொகுதியிலுள்ள கவிதைகளில் வெளிப்படும் இலட்சியவேட்கை மிகவும் முக்கியமானது. 'சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா' என்று பாடினான், பாரதி. தினவெடுத்த தீமைகளை யெல்லாம் முனிந்து கிளம்பும் பெருஞ் சீற்றம் நம் கவிஞரின் ஆக்கங்கள் பலவற்றில் முனைப்புற்று மேலோங்குவதை நாம் காண்கிறோம். இது அழிவின்பாற்பட்ட மறச்சீற்றம் அன்று. ஆக்கத்துக்கு ஆதரவு தரும் அறச்சீற்றம்!

மென்மையான உணர்வுகளை இதயத்தின் தந்திகளில் மீட்டும் கலைநயமும் நெகிழ்ச்சியும், மனிதாபிமான நோக்கும் இங்குள்ள கவிதைகள் பலவற்றில் இழையோடுவதை நுண்ணுணர்வு மிக்க சுவைஞர்கள் நிச்சயம் நயப்பார்கள்.

இத்தனை நலன்களும் வாய்ந்த நூலொன்றை நம் இரண்டாவது வெளியீடாக வெளிக்கொணர்வது பெரிதும் திருப்தி தருவதாகும். இலக்கிய அன்பர்களான பொதுமக்களின் நல்லாதரவு நமக்குக் கிடைக்கும் என்னும் உறுதியான நம்பிக்கை நமக்கு உண்டு.

பெரிய அரசடி, அறிவழகுப் பதிப்பகத்தினர்
சாவகச்சேரி.

# முன்னுரை

கலாநிதி க. கைலாசபதி
தமிழ்ப்பேராசிரியர், கலைப்பீடத் தலைவர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

நவீன காலத்துக் கவிதைகள் முற்பட்ட கவிதைகளி னின்றும் வேறுபடும் அம்சங்களில் ஒன்று கவிதையிலே கவிஞனது குரலும்-ஆளுமையும்-வெளிப்படும் முறையிலாகும். முற்காலத்துக் கவிதைகளிலே, குறிப்பாகப் பிரபந்தங்களிலே, அவற்றை இயற்றிய புலவர்களின் சொந்த மன ஓட்டங் களையோ அவசங்களையோ அபிப்பிராயங்களையோ காண் பது அரிது. பெரும்பாலும் மரபுவழிப்பட்ட அச்செய்யுள் களிலே சிற்சில விஷயங்களைச் சில அமைப்புகளிற் கூறும் முறை மையே முதன்மை பெற்றது. உதாரணமாக உலா என்னும் பிரபந்த வகையை எடுத்துக்கொண்டால், பாட்டியல் நூல் கள் அதற்கு வகுத்த இலக்கணத்தை ஒட்டிப் பாடுவதே சிறப்பாகக் கருதப்பட்டது. தலைவனொருவன் வீதியிலே பவனிவர, பேதை முதலாகிய ஏழு பருவத்துப் பெண்களும் அவனைக் கண்டு காதல் கொண்டதாகக் கலிவெண்பாவாற் பாடுவதே உலா என்று பாட்டியல்காரர் கூறுவர். பாட்டிலே தலைவனது குலம், குடி, பிறப்பு, பரம்பரை, வீரம், கொடை, மாட்சி முதலியன துலங்கக் கூறுதல் மரபு. உலாப்பாடும் புலவன் மேற்கூறிய இலக்கணத்துக்கு அமைய, தான் விரும் பும் தலைமகனை விவரித்தலே வேண்டப்படுவதாயிற்று. பாட் டுடைத் தலைவன் வேறுபடினும், பாடல் அமைப்பும், விவ ரண முறையும், யாப்பு அமைதியும், பொருட்பரப்பும் குறிப் பிடத்தக்க வகையில் வேறுபடுவதில்லை. பெரும்பாலான பிரபந்த இலக்கியங்களுக்கு இது பொருந்தும்; ஒரு குறிப் பிட்ட உலாவைப் பாடிய புலவனது கல்வியும் பயிற்சியும் புலமையும் பிரபந்தத்திலே புலப்படக் கூடும். ஆனால் அவ னது சொந்த உணர்ச்சியை நூலிலே காண்பது இயலாது. பிரபந்தங்களிலும் தொடர்நிலைச் செய்யுள்களிலும் தன் கருத்

தாகக் கவி கூறும் வார்த்தைகள் வருமிடத்து அவற்றைக் கவிக்கூற்று என்று முந்தையோர் குறிப்பிட்டனர். கவிக் கூற்று இடையிடை வருவனவாகையாலும் மிகச்சுருக்கமாக இருப்பதாலும் விரிவான கருத்து வெளிப்பாட்டிற்கோ ஆழ மான உணர்ச்சிச் சித்திரிப்பிற்கோ சாதகமாக இருந்தது என்பதற்கில்லை. கவிக்கூற்று என்பதனை தன்னுணர்ச்சிப் பாடற்கூருகக் கொண்டு நாம் மயங்க வேண்டியதில்லை. ஆயினும், பக்திப் பாடல்களிலே கவிஞர்களின் ஆத்மானு பவங்களை ஆங்காங்கு கண்டுகொள்ளலாம். சுந்தரர், மணி வாசகர், ஆண்டாள், நம்மாழ்வார் முதலிய பக்திக் கவிஞர் களின் பாடல்களில் அவர்களது சொந்த மன ஓட்டங்களை விருப்பு வெறுப்புக்களைக் காண்கிறோம். பிரபந்தங்களிலே விஷயத்தைப் புறநிலையில் வைத்துப் பாடும் முறைமையும் பக்திப் பாடல்களிலே விஷயத்தை அக நிலையில் வைத்துப் பாடும் முறைமையும், நாட்டார் பாடல்களிலே இவ்விரு பண் புகளும் பொருந்தியுள்ளன.

மிகப் பழைய தமிழ்ச் செய்யுள்களாகக் கொள்ளப்படும் சான்றோர் செய்யுள்களிலே வேறொரு மரபு செயற்பட்டுள் ளது. புலவன் புறநிலையில் நின்று பாடவும் இல்லை; தான் கலந்து நின்று பாடவும் இல்லை. புலவர்கள் ஒவ்வொரு செய் யுளையும் குறிப்பிட்ட ஒரு பாத்திரத்தின் கூற்ருகக் கருதும் படி அமைத்துக்கொண்டனர். பாத்திரங்கள் வரையறுக்கப் பட்டிருந்தமை உண்மையே. ஆயினும் நாடகக் கூற்றுப்போல பாத்திரங்களின் கூற்றையும் ஆசிரியரின் சொந்தக் கூற்ருகக் கருதிவிட முடியாதநிலை அங்கு இருந்தது. உதாரணமாக குறுந் தொகையில் 39-ம் பாட்டு ஔவையார் பாடியதாக உள்ளது.

வெந்திறற் கடுவளி
    பொங்காப் போந்தென
நேற்றுவினை உழிஞ்சில்
    வற்றல் ஆர்க்கும்

மலையுடை அருஞ்சுரம்
என்பநம்
முலையுடை முனிநர்
சென்ற ஆறே

என்ற இப்பாடல் தலைவி கூற்ருக அமைந்தது. தன்னுடன் இணைந்து துயிலுதலை மறந்து பொருளீட்டச் சென்ற தலைவன் சென்ற வழி கடுங் காற்று வீசும் வெப்பமிக்க காட்டுப் பாதையாகும் என்று தோழிக்குத் தலைவி கூறுகிருள். ஔவையார் ஒரு பெண்பாற் புலவர் என்பதற்காக இப்பாடலிலே அவரது காதலனுபவம் கூறப்படுகிறது என்று கூறவியலாது. ஏனெனில் பாடலிலே வரும் தலைவி ஒரு கற்பனைப் பாத்திரம். நாடகத் தனிமொழி போன்றமைந்தது பாடல்.

முற்காலங்களிலே இத்தகைய கவிதை மரபுகள் இருந்தன. ஆனல் பக்திப் பாடல்களிலும் இடைக்காலத்தில் எழுந்த தனிப்பாடல்கள் சிலவற்றிலும் அவற்றைப் பாடியவர்களின் தனிப்பட்ட அனுபவங்கள் தற்கூற்ருக வெளிப்பட்டன. இம்மரபின் வளர்ச்சியாகவும் நவீன சமுதாயத்திலே முனைப்பாகக் காணப்படும் தனிமனித உணர்வின் சொல்லுருவமாகவும் உருப்பெற்றுள்ளதே தன்னுணர்ச்சிப்பாடல். அது பிரபந்த வடிவத்தில் அல்லது ஏலவே வரையறை செய்யப்பட்ட பாடல் அமைப்பில் சரிவர அமையாது என்று நாம் வலிந்து வாதிக்க வேண்டியதில்லை. ஆயினும் பொதுவில், தன்னுணர்ச்சிப் பாடல் முன்மாதிரிகளுக்கு முக்கியத்துவம் அளிக்காதது என்க்கூறுவது தவருகாது. தற்புதுமையே அதன் உயிர்நிலை. நமது தமிழ் இலக்கிய உலகிலே சுப்பிரம்ணிய பாரதி காலத்திலிருந்து இத்தகைய கவிதைகள் நவநவமாக உருவாகி வந்துள்ளன. (பாரதிக்குச் சிறிது முற்பட்டவரான இராமலிங்கரின் பாடல்களிலும் தன்னுணர்வு தலைகாட்டுகிறது என்பது நினைந்துகொள்ளவேண்டியதே).

பாரதியிலிருந்து பல்வேறு கிளைகளாக வரும் கவிக்குழுக்கள் தமிழ் கூறு நல்லுலகத்தில் முத்தமிழையும் கையாண்டு வருகின்றன. இவர்களுள் கவிதை பாடுவோரிடத்து முனைப்பாகக் காணப்படும் பண்பு ஒன்று உண்டு. 'கவிஞன்' என்ற உணர்வு இவர்களிடத்து மேலோங்கி நிற்கக் காணலாம். நுண்ணுணர்வு, சொல்லாற்றல், சமுதாயப் பிரக்ஞை, இலட்சிய வேட்கை முதலியன கவிஞரிடத்தே இயல்பாகக் குடி கொண்டிருப்பதாகவும் இதனால் அவர்களது சிந்தனை, சொல், செயல் என்பன சாதாரண மாந்தரின் அளவுகோல்களுக்கு அப்பாற்பட்டனவாய் அமைந்திருப்பன எனவும் அவர்கள் நம்புகின்றனர். பாரதியாரின் கவிதைகளிலே பலவிடங்களில் அத்தகைய அசாதாரணமான தன்னுணர்வைக் காண்கிறோம்.

> ''வேடிக்கை மனிதரைப் போலே — நான்
> வீழ்வே னென்றுநினைத் தாயோ?

என்று வரும் ''யோக சித்தி'' பாடல் அடிகளிலும், ''காலனுக்கு உரைத்தல்'' என்னும் பாடலிலும்,

> ''நமக்குத் தொழில் கவிதை
> நாட்டிற் குழைத்தல்
> இமைப்பொழுதுஞ் சோராதிருத்தல்''

என்னும் அடிகளிலும் பிறவிடங்களிலும் இதனைத் தெளிவாக இனங்கண்டு கொள்ளுதல் கூடும்.

ஆங்கில இலக்கியத் திறனாய்வாளர் இத்தகைய தன்னுணர்வு பாவனை நவிற்சியின் பாற்படும் என்று கூறுவர். Romantic Poets என விவரிக்கப்படும் ஷெல்லி, வேஸ்ட்வர்த், பைரன், கீட்ஸ் முதலியோரிடத்து இத்தகைய கவிப்பேருணர்வு நிரம்பியிருந்தது, ''ஷெல்லிதாஸன்'' என்று இளமையிலே தன்னை அழைத்துக்கொண்ட சுப்பிரம்ணிய பாரதியார் கவிதைகளே தமிழில் முதன்முதலாக இப்பண்பினை

எடுத்துக்காட்டின. மேலே குறிப்பிட்டது போல, பாரதி கவி மரபில் வரும் இந்நூலாசிரியர் படைப்புக்களில் பாவனை நவிற்சியைக் குறிப்பிடத்தக்க அளவிற்குக் காணலாம். உதா ரணமாக ''பிரம்மாக்கள்'' என்ற கவிதையில்

புதியதான உலகம் அமைக்கவும்
பூர ணச்சுட ரேற்றி மகிழவும்
விதி யனைத்தையும் மாற்றித் திருப்பிஎம்
வேக ஞான விளைநில மேடையில்
மதியினாலுயர் மானிட மேதைகள்
மல்க வுங்கொடு மைக்கனல் தீயவும்
சதியி னாடுந் திற முட னேஎழுந்
தகைமை வாய்ந்தவர் நாம்புதுச் சிற்பிகள்.

கவிஞர்களின் ஆற்றலை மிகைபடக் கூறி அதுபற்றி இறும்பூ தெய்தும் மனோபாவத்தை மிகத் துல்லியமாக இப்பாடலிற் கண்டுகொள்ளலாமல்லவா? நமது கவிஞரின் ஊரைச் சேர்ந் தவரும், பல வழிகளில் அவருக்கு ஆதர்சமாக விளங்குபவ ரும் 'அண்ணு' என்று அபிமானத்துடன் அவரால் அழைக்கப் படுபவருமான முருகையனது கவிதைகளிலும் இவ்வுணர்வினை ஆங்காங்கே காணத்தக்கதாயுள்ளது.

ஊடு போய் எதையும் உள்புகுந் தேறி
ஓடி ஓடி அலசும் நுனி கொண்ட
மோடி யான வடி வேலது வாங்கி
மூசி வீசுபவர் பாவலர் ஆவார்

என்பது முருகையனின் இலட்சிய வாசகங்களில் ஒன்று. இந் நூலிலுள்ள பல கவிதைகளில் முருகையனின் நடையும் வார்ப்பும் காணப்படுகின்றன. நமது கவிஞரின் பாடல்கள் பல, கவிதையைப் பற்றியும் கவிஞரைப் பற்றியும் அமைந்தி ருத்தல் கவனிக்கத் தக்கது. ''ஓ! யாது? ஓயாது!'', ''கவி ஞன்'', ''எண்ணத் துணைவி'', ''சிரமம் குறைகிறது'', ''பாடல் புனைந்து வைப்பேன்'', ''யாழினி'', ''புழுத்த

சமுதாயம்'' என்னும் தலைப்புகளில் உள்ள கவிதைகள் கவிதை பற்றியன. ஆரம்ப நிலையிலே பல கவிஞர்களின் தன்னுணர் வானது கவிதையாக்கம், கவிப்பொருள், கவியின் மேம்பாடு முதலிய பொருள்கள் குறித்து இருப்பதும் அவதானிக்கக் கூடிய தொன்றே.

பல கவிஞரின் முற்பட்ட ஆக்கங்களை நோக்கினுல் அவை காதலுணர்ச்சி சம்பந்தமானவையாய் இருப்பதையும் கவ னிக்கலாம். அன்பு அருளாக மலர்வதுபோல, காதலே மனித நேயமாக விரிகிறது. குறிப்பாகத் தன்னுணர்ச்சிக் கவிதை கள் பல காதலைப் பொருளாகக் கொண்டமைந்தவை. தனிப் பட்ட காதல் அனுபவத்தையோ, தனிப்பட்ட சோக உணர்ச்சியையோ சர்வ வியாபகமான பொருளாக மாற்றிப் பொதுமையான உணர்வு நிலைக்கு உயர்த்துவதி லேயே கவிஞனது திறமை வெளிப்படுகிறது. ஆற்றல் முழுமை பெறுகிறது. ஓர் எடுத்துக்காட்டாக, ''நீ அழுதால்'' என்ற கவிதையைக் கொள்ளலாம்.. ஒரு பாத்திரத்தின் கூற்றுப் போல அமைந்திருக்கும் அக்கவிதையில் (பக்.83), தாய் ஒருத்தி கண்கலங்குவதைக் கண்டு மகன் கூறும் வார்த்தை கள் வடிக்கப்பட்டுள்ளன.

''தூக்கத்தில் நானிருக்கத் தூங்காமல் நீ இருந்து
பாசச் சுமைப்பாரம் தாங்கிப் பழகி எனை
.....................
நன்கு வளர்த்து விட்டாய்''

என்றும்,

துன்பச் சுழல் காற்று வீசுகையில்
முற்றும் இருண்டசிறு வீட்டை
இருட்டாமல்
பற்றுக்கோ டாகிப் பகலாக்கி வைத்தவளே''

என்றும்,

''ஏங்கித் தவித்திருப்பாய் எத்தனை நாள்''

என்றும், தாயன்பையும்தன்னைத் தாய் வளர்த்த அருமை

யையும் கூறும் அப்பாத்திரம் தாயின் சோகத்தோடு கலந்து குரல் கொடுக்கிறது. தாய்க்கும் மகனுக்கும் மாத்திரம் தெரிந்திருக்கக்கூடிய தனிப்பட்ட அனுபவங்களையும் உள்ளுணர்ச்சிகளையெல்லாம் தெரிவிக்கின்ற சம்பவங்களையும் அப்பாத்திரத்தின் வாயிலாக நாம் அறிகிறோம். சுட்டி ஒருவர் பெயர் கூறப்படாமையால் குறிப்பிட்ட அத்தாயும் மகனும் பொதுவகையில் ஒரு தாயும் மகனும் ஆகி, கவிதையைப் படிப்போர் கண்டு கேட்டு அறிந்திருக்கக்கூடிய தாயுடனும் மகனுடனும் சங்கமமாகி விடுகின்றனர். அது மட்டுமன்று. கவிதையின் இறுதிப் பகுதியில் உளவுறுதியுடன் மகன் தீர்மானமாகக் கூறுகிறான்.

தராதரங்கள் அற்ற தயவும்
தெரிந்து நிராகரிக்கப்பட்ட
நியாயத்தின் தூதுவனாய்
இன்று ஒதுக்கும் இந்த இயலா நிலைமைக்கு
என்றோ முடிவு வரும்
அன்றே விடிவாகும்
என்னை உலகமிது என்றோ ஓர்நாள் ஏற்கும்.
சின்னச் சலுகைக்குச் சிரமங்கள் ஏனம்மா?

தாயும் மகனும் உயிர்ப்பாத்திரங்களாக நம் மனக்கண்ணில் நிற்கும் அதே வேளையில், கலக்கத்தின் முடிவாக அவன் கூறும் நம்பிக்கை வாக்கியங்கள் அவர்களது உணர்ச்சி பூர்வமான தனிப்பட்ட பிரச்சினையை உலகப் பொதுவான பிரச்சினையாக்கி, அதற்குத் தருக்க ரீதியான விளக்கமும் தீர்வு முடிவும் காட்டி விடுகின்றன. விடிவை நோக்கி இருக்கும் எத்தனையோ உள்ளங்களின் இதயத் துடிப்பை இவனது சொற்கள் பிழம்புருவிற் சித்திரிக்கின்றன. புலனீடான தன்மையையும் அளித்துவிடுகின்றன. கவிதையிலே தொடக்கம்

வளர்ச்சி, முடிவு ஆகிய நிலைகளைக் காணக்கூடியதாக உள்ள தல்லவா? தன்னுணர்ச்சிக் கவிதை தனிப்பட்ட அனுபவப் பொறியாகத் தேங்கி நின்றுவிடாமல் உலகப் பொதுமையை எய்துவது இத்தகைய உள்ளார்ந்த இயக்கவியலினலேயே என்பது மனங்கொளத்தக்கது.

கவிதை ஒரு தொடர்புச் சாதனம். அதன் மூலமாகக் கவிஞன் பிறருடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுகிறன். உணர்வுகளையும் கருத்துப் படிமங்களையும் உணர்த்துகிறன். அவ்வாறு செய்யும்பொழுதே தனி மனிதனது அனுபவப் பொறி பொதுமை பெற வாய்ப்பு உண்டாகிறது. உவமை உருவகம் முதலியன இதற்கு ஏதுக்களாய் அமைகின்றன. தனது அனுபவத்தை இயன்றவரை நிறைவாகப் பிறருக்கு உணர்த்திவிடும் நிலையில் கவிஞனுக்குத் திருப்தி உண்டாகிறது. உருவாக்கமும் பரிமாற்றலும் கவிதைக்கு-ஏன் கலைக்கே- இன்றியமையாப் பண்புகள் எனலாம். தால்ஸ்தாய் கலைக்குக் கூறிய வரைவிலக்கணம் இவ்விடத்திலே பொருத்தமாகத் தோன்றுகிறது. "ஒருவர் தான் அனுபவித்து உற்றறிந்த உணர்சிகளைத் தன்னுணர்வுடன் (consciously) புறத்தேயுள்ள சிலபல குறியீடுகளினுற் பிறருக்கு வழங்குவதும், இவ்வுணர்ச்சிகளினுல் அவர்கள் பற்றிக்கொள்ளப்பட்டு அவற்றை அவர்களும் அனுபவிப்பதுமான மனித செயற்பாடே கலையெனப்படும்". தம்க்கே உரிய முறையில் தால்ஸ்தாய் எளிமை நயம் வாய்ந்த வரைவிலக்கணம் ஒன்றைத் தந்துள்ளார். இதன் அடிப்படைக் கருத்து மனங்கொளத் தக்கது. கவிதை அல்லது கலையின் மூலம் சிக்கலானதாயும் முற்றிலும் தருக்க ரீதியாக விவரிக்கமுடியாததாயும் இருத்தல் கூடும். ஆனல் அதன் நோக்கம் ஒன்றுதான். பிறருக்கு ஏதோ ஒன்றை உணர்த்துதல். ஈட்ஸ் என்ற ஐரிஷ் கவிஞர் கூறியிருப்பது போல கவிதையில் உணர்ச்சியும், கற்பனையும் ஆய்வறிவும் ஒருங்கிணைந்து இழையோடக்கூடும். ஆனல் வாசகருக்கு ஏதோ ஒன்று தெளிவுறுத்தப்படவும்

வேண்டும். 'புதுக்கவிதை' எழுதும் பலர் இவ்வடிப்படை உண்மையை மறந்துவிடுகின்றனர்.

நம்து கவிஞர் குமாரசாமியின் கவிதைகளிலே தெளிவு நிரம்ப உண்டு. உணர்த்தும் சக்தியும் போதியளவு உண்டு. புலனுணர்வுக்கு இயைந்த காதலனுபவத்திலிருந்து, கருத்து ரீதியான கோட்பாடுகள் வரையில், பற்பல பொருள்களைத் தெளிவாகவும் மயக்கமின்றியும், உறுதியான வடிவ அமைதியுடனும், பழகு தமிழிலும் பாடியுள்ளார். 'இசைவு' என்ற கவிதையில் கவிஞரது தத்துவ நோக்கினைக் காணலாம்.

கல்வயல் தந்த மற்றைய இரு கவிஞர்கள் முருகையனும் சிவானந்தனும் பரிசோதனை செய்து பார்த்திருப்பது போல குமாரசாமியும் பேச்சு வழக்கு மொழியில் இரண்டொரு கவிதைகளை எழுதியிருக்கிறார். 'ஏன் சோலி?', 'புழுத்த சமுதாயம்'', ''நான் புரிந்த பாவம்'' என்பன உதாரணங்கள்.

''உன்ரை கொப்பர் முன்பு எங்கடை வீட்டில்
உள்ள மாடுகள் மேச்சவர் – அப்போ
தின்னக்கூட வழியுமில்லாமல்
திரிய அப்பர் உதவி செய்தாராம்''

என்னும் பகுதியை (பக் 92) மாதிரிக்கூறாகக் கொள்ளலாம் இவ்விஷயத்தில் போதிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை. நாடகத்தில் (தேவை கருதி) பேச்சு மொழியைப் பயன்படுத்தியிருக்கும் அளவிற்குக் கவிதையில் எவரும் முழுமையான முயற்சியைச் சாதித்திருப்பதாகக் கூறவியலாது. இத்தகைய கவிதைகள் ஆழமான விஷயங்களை எடுத்துக் கூறும் ஆற்றல் வாய்ந்தனவாய் இன்னும் அமையவில்லை என்றே கூறத் தோன்றுகிறது.

சமீப காலமாக, தமிழிலக்கிய உலகிலே சமூகவியல் நோக்கை ஏளனஞ் செய்யும் விபரீதப் போக்கு ஒன்று தலைதூக்கிவருகிறது. தத்துவங்கள், குறிப்பாகப் பொதுவுடைமைக்

கோட்பாடுகள் காலவழுப்பட்டவை என்றும் சமூகப் பிரக்ஞையுள்ள இலக்கியங்கள் ''பிரசார'' இலக்கியங்கள் என்றும் மேதாவித்தனத்துடன் சிலராற் கூறப்படுகிறது. தத்துவத்தைக் கைவிட்டு எந்த இலக்கியமும் பயன்வள முடையதாய் இயங்கவியலாது. மைக்கல் ஹரிங்டன் என்ற எழுத்தாளர் ஒரு சந்தர்ப்பத்திற் கூறியிருப்பதுபோல, ''தத்துவம் வேண்டாம் என்று கூறுவது சோஷலிஸம் வேண் டாம் என்று மறைமுகமாகக் கூறுவதேயாகும்.'' இக்குரலின் தருக்கரீதியான முடிவு சமுதாய யதார்த்தத்தையே நிரா கரிப்பதாகும். நமது கவிஞர் இந்த நசிவுப் போக்கை ஏற் காதவர். சமுதாய மாற்றத்தை வேண்டி நிற்கும் தத்து வத்தைச் சார்ந்து நிற்பவர். போலிகளைக் கண்டு ஏமாறாத வர். அவரின் சிறப்புகளில் இத்தகைய கொள்கைப் பிடிப்பும் ஒன்று எனலாம்.

பாரதி மரபில் வரும் நவதமிழ்க் கவிதைப்பரப்பில், சமு தாயப் பிரக்ஞை பொதுளிய பாடல்களுக்குத் தனியான தோர் இடமுண்டு. நமது கவிஞரும், சமுதாய அநீதிகளையும் கொடுமைகளையும், சுரண்டலையும் கண்டு கொதித்துப்பாடி யிருக்கிறார். ''அழைத்துச் செல்லும்'', ''அழிவொன்று தேவை'', ''காலம் வரும்'', ''மௌன சத்தியம்'', 'வாழ்வு' முதலிய கவிதைகளில் ''முழுதான புதியதோர் உலகமைக்க முன்னின்றே உழைப்போம் வாரீர்'' என்று கூவும் வேகத்தைத் தரிசிக்கலாம். 'கொடுமை அழிக்கும் காலமொன்று வரும் வரும்'' என்ற உறுதியான நம்பிக்கை கவிஞரிடத்தில் நிலை கொண்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

செழுமையான சொல்வளம், தமிழ்மொழியோடியைந்த யாப்புக் கோலங்கள், உள்ளத்தை ஈர்க்கும் ஒத்திசை, உறுதி யான நம்பிக்கை, உலகளாவிய நோக்கு இவை உயர் கவி தைக்கு இன்றியமையாதவை. நமது கவிஞரது ஆக்கங்களில் இப்பண்புகள் போதியளவு பொருந்தியுள்ளன.

இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளவை கவிஞர் சில ஆண்டுகளுக்கு முன் எழுதியவை என எண்ணுகிறேன். இத்தொகுதியில், ''ஒற்றுமையாக இயங்கிடுவோம்'', 'தேட்டம்', 'நடுநிற்கும் வேர் அறிவூற்று' முதலிய சில கவிதைகள் மாமூல் விஷயங்களைப் பழகிப்போன வாய்பாடுகளில் கூறுவன. நூலின் மொத்தமான கவித்துவச் சிறப்புக்கு இவை ஊறு செய்கின்றன என்றுகூடக் கூறலாம். அண்மையில் அவர் எழுதிய கவிதைகள் மேலும் மெருகு பெற்றனவாய்க் காணப்படுகின்றன. சிறந்த ஆக்கங்கள் வாழ்விலிருந்தே மலர்கின்றன. அன்றே! கருத்துவேகமும் சிருஷ்டித் திறனும் கலந்து மின்னலிடும் அக்கவிதைகளும் நூலுருப் பெறுதல் விரும்பத் தக்கது.

நூல் வெளியீடு இயலாத காரியம் என்று எழுத்தாளர் கைசோரும் இவ்வேளையில், கல்வயல் குமாரசாமி சுவைஞர்களை நம்பி இந்நூலை வெளியிடுகிறார் என்றே கருதுகிறேன். அவருக்கு உகந்த உற்சாகத்தை அளிக்கவேண்டியது கூரறிவுடைய வாசகரின் பொறுப்பாகும். இன்னும் பல நூல்களை ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கலாமென்பது எனது நம்பிக்கை

க. கைலாசபதி

பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்,
15-8-80

# ஏன் சுற்றுகிருளோ?

ஆட்டிப் படைக்கிருள்
ஓட்டிக் கலக்குகிருள்
அப்பப்பா! என்ன அநியாயம்? நிதம்
வாட்டிப் பிடிக்கிருள்
கூட்டிக் கழிக்கிருள்
வப்பப்பா! எதுவோநி யாயம்? வெறி

ஊற்றிச் சிரிக்கிருள்
தூற்றிக் கிறுக்கிருள்
உள்ளத்தில் என்ன கிளர்வோ? எனை
ஏற்றிப் பழிக்கிருள்
போற்றித் தெளிகிருள்
என்னப்பா! என்ன விசரோ? மான்

எம்பிக் குதிக்கிருள்
வம்புக் கிழுக்கிருள்
என்னையே ஏன் சுற்றுருளோ? யான்
நம்பிக் கலங்கிட
வெம்பிச் சரிந்திட
நாட்டிய மாடுகின்ருளோ? மனத்

தோட்டக் கிணற்றிலே
பாட்டினை மீட்டுகிருள்
தோற்கடிப் பேனென்ற வீருே? அடி
போட்டுந டக்கையில்
காட்டும் விழிக்குறி
போரறை கூவலே தானே? உளந்

# நீ அழுதால்!

நீ அழுதால்!
அம்மா அழாதே ஆம்
நீ அழுதால்?
நீ அழுதால் என்னுடைய நெஞ்சத் துணிவெல்லாம்
போய் ஒடுங்கக் கூடும் பொறு
உனது கண்ணீரால்
தாயே தயவுசெய்து என்
தாளாத ஆசைகளை
வேரோடு இடுங்கி
விசுக்கி எறியாதே

என்னை வளர்க்க உன் இரத்தத்தைப் பாலாக்கி
உன்னை உருக்கி உயிர்தந்த ஓவியமே!
ஓவியமோ
இல்லையில்லை என்னுயிரே ஆனவளே
தேவைகளை இந்தச் சின்ன உயிருக்காய்
சாவை அணைக்கச் சதி செய்த தேவைகளால்
சாவின் கடைசிப் படிக்குப் பலிப் பூவாய்ப்
போகாமல் போகும் பொழுதுக் கருக்கல்களில்
வேகாமல் வெந்தோர்
சிறிய விளக்காகி
சுற்றிலும்
துன்பச் சுழல் காற்று வீசுகையில்
முற்றும் இருண்டசிறு வீட்டை
இருட்டாமல்
பற்றுக்கோ டாகிப் பகலாக்கி வைத்தவளே!

விட்டில்கள் வந்து அவ்
விளக்கை அணைப்பதற்கு எட்டிச்



கல்வயல் வே. குமாரசாமி அவர்கள் தமது பள்ளிப் பருவத்திலிருந்தே கவிதை புனைந்தும் வெளியிட்டும் வருபவர். அவர்தம் கவிதையிலே மொழியாற்றற் செம்மையும் ஓசையுணர்வுப் பெருமிதமும் தெளிவும் நுட்பமும் திறம்பட அமைந்து மிளிர்கின்றன.

இவற்றுடன்கூட, இத் தொகுதியிலுள்ள கவிதைகளில் வெளிப்படும் இலட்சிய வேட்கை மிகவும் முக்கியமானது. ‘‘சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா’’ என்று பாடினன் பாரதி. தினவெடுத்த தீமைகளையெல்லாம் முனிந்து கிளம்பும் பெருஞ்சீற்றம் நம் கவிஞரின் ஆக்கங்கள் பலவற்றில் முனைப்புற்று மேலோங்குவதை நாம் காண்கிறோம். இது அழிவின்பாற் பட்ட மறச்சீற்றம் அன்று. ஆக்கத்துக்கு ஆதரவு தரும் அறச்சீற்றம்!

மென்மையான உணர்வுகளை இதயத்தின் தந்திகளில் மீட்டும் கலை நயமும் நெகிழ்ச்சியும் மனிதாபிமான நோக்கும் இங்குள்ள கவிதைகள் பலவற்றில் இழையோடுவதை நுண்ணுணர்வு மிக்க சுவைஞர்கள் நிச்சயம் நயப்பார்கள்.

—முருகையன்.